2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற கா.பொ.த.(உயர் தர) முடிவுகளின் அடிப்படையில் 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பும் வேட்பாளர்கள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் பெறப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தில் அவர்களின் கையொப்பத்தை இட வேண்டும் (எண் 05 இன் கீழ் உள்ள "பாடநெறி ஒழுங்கு மற்றும் பல்கலைக்கழக விருப்பம்" பக்கம் மற்றும் எண் 06 இன் கீழ் "விண்ணப்பதாரரின் பிரகடனம்" பக்கம் ) மேலும் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை அல்லது கையொப்பமிடப்பட்ட முழுமையான விண்ணப்பத்தின் தெளிவான படத்தை (புகைப்படம்) apply2020@ugc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியது கட்டாயத் தேவையாகும்.

மேலும், நாட்டின் கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கையொப்பமிடப்பட்ட முழுமையான விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன் பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத வேட்பாளர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

<u>பாடசாலை வேட்பாளர்களுக்கு</u>

வேட்பாளர் பாடசாலை வேட்பாளராக இருந்தால், மேலே தற்போது விதிக்கப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் பதிவுத் தபால் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் வகையில் மேலே குறிப்பிட்டுள்ளபடி அவர்களது அச்சிடப்பட்ட முழுமையான விண்ணப்பத்தை அவரது / அவளது கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

<u>தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு</u>

- தனிப்பட்ட வேட்பாளர் ஒரு தனிப்பட்ட வேட்பாளராகவும் மேலும் அவரிடம் ஏற்கனவே கைவசம் பாடசாலை விடுகை பத்திரம் மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவகர் சான்றிதழ் (டிஎஸ் 4 சான்றிதழ்) ஆகியவற்றை கொண்டிருந்தால், அந்த ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் அல்லது தெளிவான படங்கள் (புகைப்படங்கள்) மின்னஞ்சல் மூலம் கையொப்பமிடப்பட்ட முழுமையான
- விண்ணப்பபடிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் அல்லது தெளிவான படங்கள் (புகைப்படங்கள்) உடன் மேலே குறிப்பிட்டுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்படல் வேண்டும்.

- அந்த ஆவணங்கள் ஏற்கனவே வேட்பாளர்களிடம் இல்லையென்றால், கையொப்பமிடப்பட்ட முழுமையான விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை அல்லது தெளிவான படத்தை (புகைப்படம்) மட்டும் மேலே உள்ள மின்னஞ்சலுக்கு அனுப்புதல் போதுமானது.

மேற்கண்டவைகளுக்கு மேலதிகமாக, தற்போது விதிக்கப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் அச்சிடப்பட்ட முழுமையான விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு மேலே குறிப்பிட்டுள்ளபடி பாடசாலை விடுகைச் சான்றிதழ் மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவகர் சான்றிதழ் (டிஎஸ் 4 சான்றிதழ்) ஆகியவற்றின் மூலப்பிரதி Original ஆகியவற்றை பதிவு தபால் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது கட்டாயமாகும்.

வேட்பாளர் ஒருவர் பல்கலைக்கழகத்தில் ஒரு கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டு இருப்பினும் தாம் மேற்படி தேவையை பதிவு தபால் மூலம் பூர்த்தி செய்யாத வரை அவரது தெரிவு தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.